12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள் அருளியது

# இந்துமத ஆண்டுக் கணக்கு



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் சமாது கொண்டருளுபவர்)

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 **சித்திரை** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **“இந்து மத ஆண்டுக் கணக்கு”** - மேடைப் பேச்சிற்காக தயாரிக்கப்பட்ட கட்டுரையின் நகல்.
2. **“இந்து வேதம்தான் சிறந்தது.”** - மேடைப் பேச்சிற்காக தயாரிக்கப்பட்ட கட்டுரையின் நகல்.
3. **“இந்து மறுமலர்ச்சி இயக்க இளைஞர் பேரணியின் வேண்டுகோள்.”** - 1982இல் தயாரிக்கப்பட்ட அறிவிக்கையின் நகல்.
4. **“பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் கருவாசகங்கள்”** - சென்ற இதழில் வெளி வந்த கருவாசகங்களின் தொடர்ச்சி.

---

“..... முதலில் தமிழகம், பிறகு தென்னிந்தியா, அடுத்து இந்தியா, இறுதியாக உலகம் ... என்ற நிலைகளில் ‘அருளாட்சி அறிவிப்பு’, ‘அருளாட்சி அழைப்பு’, ‘அருளாட்சி அமைப்பு’ ... என்று திட்டமிட்டுச் செயல்படத் துவங்கினோம் யாம். ஆனால், தரமும், உரமும், தீரமும், தியாகமும், அறமும், உண்மையும், பொதுநல நாட்டமும், தத்துவ உணர்வும், இறைமைப் பற்றும், ... உள்ள நல்லவர்கள் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் தத்துவத் துறைகளில் இல்லவே இல்லையென்று சொல்லும் படியான நிலையே நெடுங்காலமாகத் தமிழகத்திலும், இந்தியத் துணைக்கண்டத்திலும் நிலவிடுகிறது. இதனை வெளிப்படையாகச் சொல்லத் துணிவுள்ளவர்கள் கூட ஏனோ அடங்கி ஒடுங்கியே சென்று விடுகின்றனர். ... இவற்றையெல்லாம் நினைத்துத்தான் எந்த நொடியிலும் எமது அருளாணை கேட்டுச் செயலுக்கு எழும் பல நூறாயிரக் கணக்கான அருளாளர்களைத் துணையாகப் பெற்றும்; அடங்கியே, உரிய சூழல் உருவாகாமல் யாம் வெளிப்படக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! .....”

**குருதேவர் அவர்களின் அஞ்சல் திரட்டிலிருந்து எடுக்கப் பட்ட சில வரிகள்.**

(கட்டுரை எண்: 6)

# <u>இந்துமத ஆண்டுக் கணக்கு</u>

(1) பொதுமக்களே! தாய்மார்களே! பெரியோர்களே! இளைஞர்களே! சிறுவர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் பதினெண்சித்தர் மடத்தின் இந்துவேதாகம பாடசாலையில் அனாதிசிவனின் மனுநீதி நூல்களையும், இந்துமத நூல்களையும் படித்துக் கொண்டிருக்கும் மாணவியாகிய சித்தர் நான்மறையுடையாராகிய நான் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) இன்றைக்கு **<u>காலக்கணக்கீடு என்றால் என்ன</u>**? என்பதைப் புரிந்து கொண்டோம் என்றால், இந்து மத ஆண்டுக் கணக்கு என்பதை எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். அதாவது, காலக்கணக்கீடு என்றால் ஒரு குறிப்பிட்ட நாட்டில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடந்திட்ட ஏதாவது ஒரு சிறப்பான நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணித்துச் சொல்வார்கள். அப்படிச் சொல்வதுதான் காலக் கணக்கீடு ஆகும்.

(3) அதாவது, உலகியலாக பெரிய அரசர்களோ! அல்லது மாவீரர்களோ! அல்லது மகான்களோ! அல்லது ஞானிகளோ! அல்லது தவசிகளோ! அல்லது கடவுள்களோ! அல்லது தெய்வங்களோ! அல்லது தேவர்களோ! அல்லது ஆண்டவர்களோ! அல்லது தேவகுமாரர்களோ! அல்லது மதவாதிகளோ! ... தோன்றிச் செயல்பட்டிட்ட காலத்தை அவர்களுடைய பிறப்பிலிருந்து காலத்தைக் கணித்துக் கூறுவது மரபாக இருக்கிறது, பழக்கமாக இருக்கிறது. இதுதான் காலக் கணக்கீடு. அதாவது, இன்றைக்கு

1995 என்று சொன்னால் அது கிறித்துவ ஆண்டுக் கணக்கு என்று சொல்கிறோம், எழுதிக் கொண்டிருக்கிறோம். கிறித்துவ ஆண்டுக் கணக்கு என்றால் ஏசு பிறந்த ஆண்டை அடிப்படையாக வைத்து; **கி**றித்து பிறப்பதற்கு **மு**ன், **பி**ன்; அதாவது **கி.மு.**, **கி.பி.** என்று சொல்லிப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். முகம்மது நபியை வைத்து இசுலாமிய ஆண்டுக் கணக்கு இருக்கிறது. இதுபோல், புத்தரின் ஆண்டுக் கணக்கு, மகாவீரரின் ஆண்டுக் கணக்கு இருக்கின்றன. இதேபோல், மன்னர்கள் விக்கிரமாதித்தன், சாலிவாகனனை வைத்து விக்கிரமாதித்தன் ஆண்டு, சாலிவாகனன் ஆண்டு என்று கூறுகிறோம்.

இதேபோல், இன்றைக்குத் தெரிந்த மொழியின் பெயரால் ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு ஆண்டு கணக்கு என்றும், கேரளாவில் மலையாள ஆண்டுக் கணக்கு என்றும், வங்காளத்தில் வங்காள ஆண்டுக் கணக்கு என்றும், குசராத்தில் குசராத்தி ஆண்டுக் கணக்கு என்றும் ஆண்டுக் கணக்குகள் இருக்கின்றன.

(4) ஆனால், **இன்றைக்கு உலகமே மறந்து போயிருக்கின்ற ஆண்டுக் கணக்கு ஒன்று உள்ளது. அதுதான், இந்து மத ஆண்டுக் கணக்கீடு**. இதை இந்துக்களே கூட மறந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட காலக்கணக்கீட்டைப் பற்றி உங்களுக்குக் கூற வேண்டும் என்பதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன்.

பெரியோர்களே! நான் இந்து வேத பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு மாணவி. எனவே, நான் எனக்குத் தெரிந்த ஒரு சில செய்திகளை மட்டுமே இங்கு கூற முற்படுகிறேன். என்னுடைய முயற்சியை நீங்கள் ஏற்றுச் சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[இந்துமதம் இந்த மண்ணில் தோற்றுவிக்கப் பட்டு] நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்றுயிரத்து தொண்ணூற்றுறு (43,73,096) ஆண்டுகள் ஆகிறது. எனவே, [இது போன்ற] Calendar System இந்த உலகிலேயே எந்தவொரு மதத்திலும் இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!

(5) அதாவது! அதாவது!! அதாவது!!! ஒவ்வோர் இந்துவும், தலை நிமிர்ந்து பூரிப்போடும், பெருமிதத்தோடும் நினைக்க வேண்டியது, எண்ணிப் பார்க்க வேண்டியது, வெளியே கூற வேண்டியது இதுதான். உங்களுடைய இந்துமதம் நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்றுயிரத்து தொண்ணூற்றுறு ஆண்டுகள் (43,73,096) வாழ்ந்து வருகின்ற இந்துமதம் இது. உலகளாவிய மதம், காலத்தை வென்று நிற்கின்ற மதம், காலத்தால் அழிக்க முடியாமல் போன ஒரு மதம் என்ற பேருண்மைகள் இந்துமத ஆண்டுக் கணக்கின் மூலம்தான் வெளியே வருகின்றன. எனவே, எங்களுடைய இந்து வேத பாடசாலை இந்துமத ஆண்டுக் கணக்கு பற்றிய செய்திகளை, குறிப்புக்களை பரப்பிட முன்வந்திருக்கிறது.

(6) மனுநீதியார் எனப்படும் அனாதிசிவன் அண்ட பேரண்டங்களிலிருந்து இம் மண்ணுலகுக்கு வந்து இந்துமதத்துக்காக மனு நீதி நூல்களை அருள ஆரம்பித்த நாளிலிருந்து கணக்கிடப் படுவதுதான் இந்துமத ஆண்டுக் கணக்கு. இதன்படிதான் அனாதிசிவன் இம்மண்ணுலகுக்கு வந்து செயல்பட ஆரம்பித்து [கி.பி.1995இல்] இன்றோடு (43,73,096) நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்தி மூன்றுயிரத்து தொண்ணூற்றுறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுதான் இந்துமத ஆண்டுக் காலக் கணக்கீடு.

(7) இந்த ஆண்டுக் கணக்கில் முழுப் பகுப்புகளாக அனாதிக் காலம் என்று ஒன்றும், ஆதிக்காலம் என்று மற்றொன்றும் ஆக

இரண்டு பெரிய பகுப்புகள், பிரிவுகள் இருக்கின்றன. அதாவது, மனுநீதியார் எனப்படும் அனாதிசிவன்கள் பல்லாயிரக் கணக்கில் அண்டபேரண்டங்களிலிருந்து கொண்டு வந்த மனுநீதி நூல்கள் (18) பதினெட்டின் கருத்துக்களை இம்மண்ணுலகில் பரப்பிய காலம்தான் அனாதிக் காலம் எனப்படுகிறது. இந்தக் காலம் (4,85,920) நான்கு இலட்சத்து எண்பத்தையாயிரத்து தொள்ளாயிரத்து இருபது ஆண்டுகள் ஆகும்.

(8) அதாவது, இம்மண்ணுலகம் முதலில் நெருப்புக் காற்றுக் கோளமாக, காற்று உருண்டையாக ஒரு [நூறு] கோடி ஆண்டுக் காலம் இருந்தது என்றும்; அதற்குப் பிறகு ஒரு [நூறு] கோடி ஆண்டுக் காலமாக நெருப்புத் துண்டமாக, நெருப்புக் கனலாக, நெருப்புக் கங்காக இருந்தது என்றும்; அதற்குப் பிறகு ஒரு [நூறு] கோடி ஆண்டுகள் பனிக்கட்டிக் கோளமாக இருந்தது என்றும்; அதற்குப் பிறகு ஒரு [நூறு] கோடி ஆண்டுகள் தண்ணீர்க் கோளமாக இருந்தது என்றும்; அதற்குப் பிறகே படிப்படியாக தண்ணீர் வற்றி தண்ணீர்ப் பரப்பு குளிர்ந்து கற்பாறைகள், கருங்கல் மலைகள் வெளிப்பட்டன என்றும்; அம் மலைகளுக்குப் பிறகே, கற்பாறைகளுக்குப் பிறகே; மண்ணும், மணலும் மிகுந்த நீர்ப்பரப்பு தோன்றியது என்றும்; அதற்குப் பிறகே புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலிய பயிரினங்கள் தோன்றின என்றும்; அவற்றை ஒட்டிய புழு, பூச்சி, ஊர்வன, பறப்பன, நடப்பன என்று எல்லா உயிர்களும் தோன்றின என்றும்; இறுதியாகவே எல்லாப் பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் தலைவராக, அதாவது இந்த மண்ணின் ஈசராக (ஈசன் என்னும் சொல்லுக்குத் தலைவன் என்று பொருள்) மனீசர்கள் தோன்றினர். இவர்கள் எந்தவிதமான அகப் பண்பாடோ,

புற நாகரீக உணர்வோ இல்லாமல் மற்ற உயிரினங்களோடு உயிரினங்களாக, மிருகங்களோடு மிருகங்களாக வாழ்ந்திட்டனர்.

இந்த மணீசர்களைப் பண்பட்ட மனதை உடைய மனிதராக மாற்றுவதற்குத்தான் அண்டபேரண்டங்களை ஆளுகின்ற மூலப் பதினெண்சித்தர்கள் தொடர்ந்து அஞுதிசிவன்களை அனுப்பினுர்கள். இந்த அஞுதிசிவன்கள் **அண்டபேரண்டம் ஆளும் மூலப் பதினெண்சித்தர்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழி**யில் காலம் காலமாக இருந்த மனு நீதி நூல்களைப் பயன்படுத்தி மணீசர்களை மனிதர்களாக ஆக்கும் பணியைத் துவக்கினுர்கள். இப்படி இவர்கள் மனு நீதி நூல்களை இம்மண்ணுலகில் பரப்பிட வந்திட்ட காரணத்தால் இந்த அஞுதிசிவன்கள் மனுநீதியார்கள் என்ற சிறப்புப் பெயர் பெறுகிறுர்கள்.

(9) அதாவது, இந்த மனுநீதியார்கள் என்கின்ற அஞுதிசிவன்கள் முதல் கட்டமாக எல்லா உலகிலும் தோன்றிடும் மணீசர்களை பக்குவப் பட்ட மனிதர்களாக மாற்றுவதற்காக மனுநீதியின் நூல்களின் கருத்துக்களைப் பரப்பிடுவதற்காக இருப்பவர்கள். எனவேதான், இவர்கள் மனுநீதியார் என அழைக்கப் படுகிறுர்கள்.

(10) இங்கே இந்துமத உண்மைப்படி (1359) ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது உலகங்கள் இருக்கின்றன. இவை அனைத்திலும் மனிதர்கள் வாழுகிறுர்கள். இவர்களை எல்லாம் மனிதர்களாக மாற்றியது மனுநீதி நூல்கள்தான் என்பதே உண்மையான வரலாறு ஆகும். இதன்படிதான் இம்மண்ணுலகில் அஞுதிசிவன் என்பவர்கள் பல்லாயிரக் கணக்கில் இம்மண்ணுலகில் வந்து மனுநீதிக் கருத்துக்களைப் போதித்தார்கள். அதன்மூலம்,

மனிசர்களை ஒரு குறிப்பிட்ட பக்குவத்தை அடையும்படிச் செய்திட்டார்கள். அப்படி மனிசர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பக்குவம் வரும்படிச் செய்வதற்காக பல்லாயிரக் கணக்கான மனுநீதி சிவன்கள் பாடுபட்டிட்ட காலம்தான் (4,85,920) நான்கு இலட்சத்து எண்பத்தையாயிரத்து தொள்ளாயிரத்து இருபது ஆண்டுகள். இந்த 4,85,920 ஆண்டுகள் எனப்படும் நீண்ட இடைவெளிக் காலம்தான் **அனாதிக் காலம்** எனப்பட்டது.

(11) அடுத்தது **ஆதிக் காலம்** ஆகும். அனாதிக் காலம் முடிந்து ஆதிசிவனார் எனும் இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, பரப்பிறம்மம், எல்லாம் வல்ல சித்தர், கருகுல ஆதீனம், கருமூலப் பண்டாரம், அனாதி ஆதி கடந்த தம்பிரான் அடிகளார், அண்டபேரண்ட அனாதி ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் என்று 192 அருட்பட்டங்களைப் பெற்றவர். இவரால்தான் இம்மண்ணுலகுக்கு மனுநீதியின் போதனைகளால் சாதிக்கப் படாத சாதனைகளை சாதிப்பதற்காக இந்துவேத நூல்கள் (396) முந்நூற்றுத் தொண்ணூற்ருறு; இந்துவேத சூலகங்கள் எனப்படும் சுலோகங்கள் (4,42,368) நான்கு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து முன்னூற்று அறுபத்தெட்டு; இந்துமத நூல்கள் (36) முப்பத்தாறு, இவற்றிற்குரிய (1,72,800) ஒரு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எண்ணூறு கருத்துரைகள், இவை எல்லாவற்றையும் உள்ளடக்குகின்ற நான்கு (4) வேதங்கள் ஆகியன அருளப் பெற்றன.

எனவேதான், இந்த ஆதிசிவனார் பெயரால் இந்த உலக மக்கள் அனைவரும் முறையான, நெறியான, நிறைவான நல்வாழ்வைப் பெற்றிட்டார்கள் என்பதற்காகவே அனாதி காலத்திற்குப்

பிறகு இவர் வந்திட்ட காலம் ஆதிக்காலம் எனப் பெயரிடப் பட்டது. **இந்த ஆதிக்காலம் இந்துவேதக் காலம் எனப்பட்டது**. இதுபோலவே, **அனாதிக் காலம் மனுநீதிக் காலம் எனப்பட்டது**.

(12) இந்துவேதக் காலம் எனப்படும் ஆதிக்காலம் மண்ணுலக ஐவர் குழு எனப்படும் முப்பத்து மூவாயிரம் கோடி தேவர்கள், நாற்பத்தெட்டாயிரம் கோடி இருடிகள், ஆயிரம் கோடி தேவதைகள், தொண்ணூற்று ஆறாயிரம் கோடி கணங்கள், நூற்றெட்டாயிரம் கோடி முனிவர்கள் எனப்படும் ஐந்து வகைப் பட்டவர்களாலும்; விண்ணுலக ஐவர் குழு அல்லது வானுலக ஐவர் குழு என்று குறிக்கப் படும் விண்ணுலகப் பதினெண்சித்தர்கள், விண்ணுலக பதினெட்டாம்படிக் கருப்புகள், விண்ணுலக நாற்பத்தெட்டு வகைக் கடவுள்கள், விண்ணுலக நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்கள், விண்ணுலக நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர்கள் எனப்படும் ஐந்து வகைப்பட்டவர்களாலும்; ஆக மொத்தம் பத்து வகைப் பட்டவர்களால் முறையாக ஆராயப்பட்டு நான்கு பெரும் பிரிவுகளாக வழங்கப்பட்டது. இதன்படி,

முதல் யுகம் (ஆதி யுகம் = கீரன் உகம்) வேதத்தின் அடிப்படைகள் அனைத்தும் முழுமையாக உருவாக்கிக் கொடுத்த உகம். வேதத்துக்கு உரிய நாட்டுக் கடவுள்கள், கிராமத்து தேவர் தேவதைகள், குல தெய்வங்கள், குடும்ப ஆண்டவர்கள் எனும் நால்வரும் உருவாக்கப் பட்டார்கள். இவற்றிற்குரிய அனைத்தும் முறைப்படி ஏட்டில் எழுதப் பட்டுவிட்டன. இப்படி எழுதுவது ‘கீறுதல்’ எனப்படும். அதாவது, கீறி எழுதுதல். இவை சிறப்பாக, குறிப்பாக அருளுலகத்தைப் பற்றியவை என்பதால் ‘**கீறந்தங்கள்**’. அதாவது ‘கீறந்தங்கள்’ என்றால்

அருளுலகத் தொடர்பான நூல்கள் என்று பொருள். இச் சொல்லே காலப் போக்கில் **கிரந்தங்கள்** எனப்பட்டன.

இப்படி கீறந்தங்கள் எனப்பட்ட சொல் உருவான பிறகு; பொதுவாக மனித வாழ்விற்குரிய நுட்பமான சமய நூல்கள், சமுதாய நூல்கள், அரசியல் நூல்கள், மருத்துவ நூல்கள், போர்க் கலை பற்றிய நூல்கள், ... முதலிய நூல்கள் எல்லாம் கீறந்தங்கள் என்று சொல்லப் பட்டன. இதன் அடிப்படையிலேயே கீறந்தங்கள் உருவான யுகம் எனும் அடிப்படையில் கீறந்தம் + தரப்பட்ட + காலம் = 'கிரேதகா யுகம்' என்ற சொல் உருவாக்கப் பட்டது. அதுவே கிரேதா யுகம் என்றுஆயிற்று.

இந்த கிரேதா யுகத்தில்தான் சிவ புராணம், சத்தி புராணம், பிறம்ம புராணம், திருமால் புராணம், வருண புராணம், இந்திர புராணம், இறமண் புராணம், முருக புராணம், மா புராணம், ... முதலிய பல புராணங்களும்; இதிகாசங்கள் எனப்படும் உரக்கக் கூறப்படும் கதைகள், காதைகள், கவிதைகள், கீதைகள், ... முதலியவைகள் எல்லாம் எழுதப்பட்டன. இந்தக் காலம் (17,28,080) பதினேழு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து எண்பது ஆண்டுக் காலம்.

இந்தக் கிரேதா யுகத்தில்தான் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் போர் நிகழ்ந்தது என்றும்; தேவர் என்ற சொல் பொதுவாக நாட்டுக் கடவுள்களை மட்டுமே குறிப்பிடுவதாக குறிப்பிடப் படுகிறது. இந்த யுகத்தில் விண்வெளியில் இருந்து வந்த அனைவரும் தேவர்கள் என்றும், இம்மண்ணுலகில் இருந்த அனைவருமே அசுரர்கள் என்றும் குறிப்பிட்டார்கள். இவர்களுக்கிடையே நடந்த போர்கள்தான் தேவாசுரப் போர். இதில் தேவர்கள் வெற்றி பெற்றனர். அசுரர்கள் தோல்வியுற்றனர். இந்த தேவாசுரப் போர்

ஆதிசிவனால் மிகப் பெரிய வெற்றிகளைப் பெற்றிட்ட விவரங்களையும், அவரது மகன் முருகன் அசுரர்களை முழுமையாக அழித்தான் என்ற விவரங்களையும் கிரேதா யுகத்தின் சிறப்புச் செய்திகளாகக் கருத வேண்டியிருக்கிறது.

(13) <u>தீரன் உகம்</u>:- இது தீரன் தந்த யுகம் என்றதால் திரேதகா யுகம் எனப்படுகிறது. இதுவே 'திரேதா யுகம்' எனப்பட்டது. இதனுடைய கால அளவு (12,90,000) பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூறுயிரம் ஆண்டுகள் எனப்படும் மிகப் பெரிய இடைவெளி ஆகும். இதில்தான் இராமாயணம் நிகழ்ந்தது. சூரிய குலத்தார் காகபுசுண்டர்கள் ஆட்சி ஓங்கியது. பின் மானுடர்களுக்கும், அசுரர்களுக்கும் [அரக்கர்களுக்கும்] போர் நிகழ்ந்தது பற்றிய முழு விவரங்களும் திரேதா யுகத்தில் கூறப்பட்டுள்ளது. இதையே அதன் தனிச் சிறப்பு செய்திகளாகக் கூற வேண்டியிருக்கிறது.

(14) இதற்கடுத்து <u>துவாபர யுகம்</u>. இது தூரன் தந்த யுகம். தூரன் என்றால் தத்துவ ஞானி என்று பொருள். இதனுடைய கால அளவு (8,64,000) எட்டு இலட்சத்து அறுபத்தி நான்காயிரம் ஆண்டுகள் ஆகும். இந்த யுகத்தில் தோன்றிய பதிலிகள், அரக்கர் வாரிசுகள், தேவ வாரிசுகள், மாயா சத்தியாளர்கள், ... முதலியோருக்கும் மானுடருக்கும் போர் நிகழ்ந்தது. இது சந்திர குலத்தின் ஆட்சி. பதினெண்சித்தர்களில் குருபீடம் ஏற்ற கருவூரார் வாரிசுகள் 'குருகுலத்தார்' ஆட்சிக் காலம் ஆகும்.

பின் கலியுகம் தோன்றி இன்றோடு (5,096) ஐயாயிரத்து தொண்ணூற்று ஆறு ஆண்டுகள் ஆகின்றன.

(15) பொதுமக்களே! நீங்கள் நினைக்கலாம். என்னவோ இவர்கள் வந்தார்கள், இந்துக்குரிய இந்துமத ஆண்டு காலக் கணக்கீடு என்று (43,73,096) நாற்பத்தி மூன்று இலட்சத்து எழுபத்தி

மூன்ருயிரத்து தொண்ணூற்ருறு ஆண்டுகள் எனக் கூறிவிட்டுச் சென்றனர் என்று நினைக்க வாய்ப்பு உண்டு. ஆனுல், இந்துக்களே! இந்த இந்துமத ஆண்டு காலக் கணக்கீடு என்பது பதினெண்சித்தர்களால் மிகத் தெளிவாக எழுதப் பட்ட காலக் கணக்கீடாகும். இது நம்முடைய இந்துவேதத்தில் மட்டும்தான் உள்ளது. வேறு எந்த மொழியிலும் இல்லை.

எனவே, இந்துக்களே! நம்முடைய இந்துக்களுக்கென இந்துமத ஆண்டுக் காலக் கணக்கீடுதான் நம் இந்துக்களுக்கு பெருமை தரக்கூடிய ஒன்று. ஏனென்ருல், இந்த உலகில் எந்த மதமும் இவ்வளவு பெரிய காலக் கணக்கை வைத்துக் கொண்டிருக்க வில்லை. இன்னும் சொல்லப் போனுல், மனிதர்கள் (43 இலட்சம்) நாற்பத்து மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றினுர்கள் என்ற பேருண்மையை இந்துமதம் ஒன்றுதான் இந்த உலகுக்கே அறிவிக்கிறது. அந்த அறிவிப்பு இந்த இந்துமத ஆண்டு காலண்டரில்தான் இருக்கிறது.

இந்த உலகில் உள்ள விஞ்ஞானிகள் யாரும் இந்த உலகில் மனிதர்கள் எப்போது தோன்றினுர்கள் என்று கண்டுபிடித்து கூறவில்லை. ஆனுல், இந்துமதம் இம்மண்ணுலகில் மனிதர்கள் தோன்றியது திட்டவட்டமாக (43,73,096) நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்ருயிரத்து தொண்ணூற்ருறு ஆண்டுகள் முன்பு. அதாவது, அதற்கு முன்பு பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் தோன்றி இருக்க வேண்டும் என்று கூறுகிறது. அப்படி மனிதன் தோன்றுவதற்கும் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்புதான் எல்லாவகையான விலங்குகள்; அதாவது உயிரினம், மிருகங்கள், பறவைகள் முதலியவை தோன்றியிருக்க வேண்டும் என்று மிகத் தெளிவாக இந்துமதம் கூறுகிறது. இப்படி மிருகங்களும்,

பறவைகளும், மற்ற உயிரினங்களும் தோன்றிட்ட காலத்திற்கும் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்புதான் மரம், செடி, புல், பூண்டுகள் தோன்றி இருக்க வேண்டும் என்று மிகத் தெளிவாக இந்துமத ஆண்டு குறிப்பிடப் படுகிறது.

அதாவது, இங்கு நான் இந்த ஆண்டுக் கணக்கை கூற வந்த காரணமே இந்த உலகம் எப்படித் தோன்றிற்று?, எப்போது?, எங்கிருந்து?, எவ்வளவு காலம் கழித்து? இவ்வுலகில் புல், பூண்டு, மரம், செடி தோன்றின? பிறகு எவ்வளவு காலம் கழித்து புழு, பூச்சி, பறவை, மிருகம் முதலியவை தோன்றின? பிறகு எவ்வளவு காலம் கழித்து மனிதர்கள் தோன்றினுர்கள்? அப்படித் தோன்றி மனிதர்கள் எவ்வளவு காலம் மிருகங்களோடு மிருகங்களாக வாழ்ந்தார்கள்? அப்படி மிருகமோடு மிருகமாக வாழ்ந்த மனிதனே யார் எப்போது பண்பட்ட மனிதனுக மாற்றியது? இம்மண்ணுலகில் எத்தனே வகையான மொழிகள் தோன்றின? எத்தனே வகையான மதங்கள் தோன்றின? எத்தனே வகையான நாடுகள் தோன்றின?, ... என்ற செய்திகள் எல்லாம் இந்து வேதத்திலே இருக்கின்றன. இவற்றை எல்லாம் எடுத்துக் கூறினுல் வாரக் கணக்கு, மாதக் கணக்கில் எடுத்துக் கூறலாம். பதினெண்சித்தர் மடத்தின் இந்து வேதாகம பாடசாலேயில் இவையெல்லாம் ஆர்வமுள்ளவர்களுக்கு கற்பிக்கப் படுகின்றன. இவற்றை எல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதால்தான் இந்த **இந்துமத ஆண்டுக் காலக் கணக்கீடு** என்ற தலேப்பில் பேச வந்துள்ளேன்.

அதாவது நமது இந்துமதம் (43,73,096) நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்ருயிரத்து தொண்ணூற்ருறு ஆண்டுக்காலம் வளர்ந்து வந்திருக்கிறது. இவ்வளவு நெடுங்காலம் வாழ்ந்து

கொண்டிருக்கிறது என்ற பேருண்மை உங்களுக்குத் தெரியுமேயானுல்தான் நமது இந்துமதத்தில் என்னென்ன இருக்கிறது என்ற ஆர்வம் உங்களிடையே எழும். அதுமட்டுமல்ல, நமது இந்துமதம் மட்டும் எப்படி, இப்படி (43,73,096) நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்ருயிரத்து தொண்ணூற்ருறு ஆண்டுகள் இருந்து வரும்? என்பதற்கு விடை காண அக்கறை வரும். அந்த அக்கறை வந்தால்தான் இந்துமதம் மறுமலர்ச்சி அடையும். நல்ல வளர்ச்சியை, வளவளர்ச்சியை அடையும்.

(16) இந்துக்களே! இங்கு நமது குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் இங்கு, இந்த இடத்திலே, இந்த ஊரிலே எழுந்தருளியிருக்கிருர். மற்றும் எங்கள் பதினெண்சித்தர் மட சன்னிதானங்கள் எனக்கு அடுத்துப் பேச இருப்பதாலும், எங்களுடைய குருதேவர் பேச இருப்பதாலும், அவருடைய சொற்பொழிவினை அனைவரும் கேட்டுப் பயன் அடையுமாறும், அருளாசி பெறுமாறும் கேட்டுக் கொண்டு இத்துடன் எனது சிற்றுரையை முடித்துக் கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

எழுதியவர்:

சித்தர் நான்மறையுடையார்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது.//**

# இந்து வேதம்தான் சிறந்தது!

**ஓம் குருவாழ்க! ஓம் குருவே துணை! ஓம் குருவே சரணம்!**
**ஓம் குருவே போற்றி! ஓம் குருவே எல்லாம்!**

இங்கு கூடியுள்ள பெரியோர்களே! சான்றோர்களே! இந்துமதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும் ஈடுபாடும் உள்ள இந்துக்களே! சிறுவர்களே! இளைஞர்களே! உங்களனைவருக்கும் பதினெண்சித்தர் மடத்தால் உருவாக்கப் பட்டுக் கொண்டிருக்கக் கூடிய சித்தர்களுள் ஒருத்தியான நான் என் வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மக்களே! இங்கு சித்தர் நான்வேதமுடையாராகிய நானும், எனக்கு முன் பேசிய சித்தர்களும், சன்னிதானங்களும், ஆதீனங்களும் எனக்குப் பின் பேசப் போகின்ற சித்தர்களும், சன்னிதானங்களும், ஆதீனங்களும் எதைப் பற்றி பேசினாலும் அவை இந்து வேதத்திலுள்ள கருத்துக்கள்தான்.

எனவே அப்படிப்பட்ட இந்து வேதத்தைப் பற்றி நாம் முழுமையாகத் தெரிந்து கொள்ளாவிட்டாலும், ஓரளவாவது தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு நான் இந்து வேதத்திலுள்ள மிகப் பெரிய தனிப்பட்ட சிறப்புக்களில் ஒரேயொரு மாபெரும் பேருண்மையினை மட்டும் கூற விரும்புகின்றேன்.

அதாவது, **'மனிதனும் கடவுளாகலாம்'** என்ற பேருண்மையினைப் பற்றித்தான் இங்கு கூற விரும்புகிறேன். ஆனால், அதற்கு முன்னால், ஒரு சிறு விளக்கம். அதாவது நான், சித்தர் நான்வேதமுடையார் என்றவுடன் உங்களில் ஒரு சிலர் ஆச்சரியப் படுவதைப் போலவும், ஒரு சிலர் நகைப்பதைப் போலவும் தெரிகிறது. எனவே இதைப் பற்றிய சிறு விளக்கத்தைத் தந்து விட்டுப் பிறகு நான் பேச வந்த

கருத்தைப் பேசலாம் என்றிருக்கின்றேன். ஏனென்றால், ஆரம்பமே உங்களுக்குப் புரியவில்லை யென்றால், எதுவுமே புரியாது. பிறகு, நான் பேசிப் பயனில்லை. எனவே, இதைப் பற்றிய ஒரு சிறு விளக்கத்தை இப்போது கூறுகிறேன்.

முதலில் மக்களே! ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது சித்தர்களில் பெண்களும் இருக்கிறார்கள். அதுவும் பதினெண் சித்தர்களிலேயே பெண்கள் இருக்கிறார்கள். அதுவும் பாதிக்குப் பாதி பெண்கள் இருக்கிறார்கள். அதாவது **பதினெண் சித்தர்களிலேயே 9 பேர் பெண்கள், 9 பேர் ஆண்கள்**. சித்தர்கள் என்றாலேயே ஆண்கள்தான் என்றுதான் நிறைய பேர் நினைக்கிறார்கள். அது தவறு. இந்துமதத்தில் நம்பிக்கையும் ஈடுபாடும் உள்ளவர்களில் கூட பெரும்பாலானோர்க்கு சித்தர்களில் பெண்கள் இருக்கின்றார்கள் என்பது தெரியாது. இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள். அருளுலகத்தில் பெண்களுக்கு எல்லா நிலைகளிலும், சரி சமமான நிலை உண்டு என்பதை. இப்படி பெண்களுக்கு; ஆண்களுக்கு நிகரான உரிமையை, பெருமையை தரக்கூடிய ஒரேயொரு மதம் இந்துமதம்தான். இதுதான் இந்துமதத்தின் சிறப்பு.

மேலும், உங்களுக்கெல்லாம் இன்னொரு கேள்வியும் எழுந்திருக்கும். அதாவது, சிறிய பெண்ணும் சித்தர் என்று சொல்லிக் கொள்கிறாள். பெரிய பெண்களும் ஆண்களும் கூட சித்தர் என்று சொல்லிக் கொள்கிறார்கள்! என்ன கதை இது?! என்று யோசித்திருப்பீர்கள். அதாவது, சிறியவர்களாக இருந்தாலும் சரி, பெரியவர்களாக இருந்தாலும் சரி, நாங்களனைவரும், இந்து வேதாகம பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கக் கூடியவர்களே! நாங்களனைவரும் சித்தர்களாக மாறப் பயிற்சி எடுத்துக் கொண்டிருப்பவர்களே! அதாவது medical collegeஇல் 1st year படிக்கிறவனும் M.B.B.S. படிப்பதாகத்தான் கூறிக் கொள்கிறான். Final Year படிக்கிறவனும் தான் M.B.B.S.

படிப்பதாகத்தான் கூறிக் கொள்வான். அதேபோல், Engineering Collegeஇல் படிக்கிறவர்களும் அவர்கள் 1st year படிப்பதாக இருந்தாலும், 2nd, 3rd, Final year படிப்பவர்களாக இருந்தாலும், தான் Engineering படிப்பதாகத்தான் கூறிக் கொள்வார்கள். அது போல்தான், நாங்களும் சித்தர்கள் என்று கூறிக் கொண்டாலும் அவரவர்களுடைய நிலை வேறு.

எனவே மக்களே! நீங்களும் - நீங்கள் யாராக இருந்தாலும் - சன்னிதானங்களாக மாறலாம்! நீங்கள் யாராக இருந்தாலும், உங்களை நீங்கள் விரும்பும் அருளாளர்களாக மாற்றும் ஆற்றல் பெற்றவர்தான் எங்கள் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இந்தக் கலியுகத்தில், இந்த computer யுகத்தில் சித்தர்களா? அவர்களெல்லாம் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்களல்லவா? என்று நினைத்திருப்பீர்கள். அதாவது, சித்தர்கள் காலந்தோறும் வருகின்ற பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் உருவாக்கப்பட்டார்கள். உருவாக்கப்படுகிறார்கள், உருவாக்கப் படுவார்கள். அதுபோலத்தான் இந்தக் காலத்தில் தோன்றியுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், அரசயோகிக் கருவூரார், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் இக் கரூரிலுள்ள பசுபதீசுவரர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தாத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் மகள் வயிற்றுப் பேரனால் உருவாக்கப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்தான் நாங்கள். எனவே மக்களே! ஓரளவாவது உங்கள் சந்தேகம் தீர்ந்திருக்கும் என நம்புகிறேன். இப்போது நான் கூற வந்த கருத்தைக் கூறுகிறேன்.

அதாவது மனிதர்களும் கடவுளாகலாம். அதாவது மனிதர்கள் கடவுள்களானார்கள், ஆகிக் கொண்டிருக்கிறார்கள், ஆகப் போகிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு மாபெரும் பேருண்மையினைக் கூறக்கூடிய ஒரேயொரு வேதம், இந்துவேதம்தான். இதுதான் இந்து வேதத்தின் சிறப்பு.

ஏனென்றால், இந்துவேதம் ஒன்றுதான் கடவுளர்களாலேயே அருளப்பட்ட வேதம். உலகிலேயே இந்துவேதம் ஒன்றுதான் கடவுளர்களால் அருளப்பட்ட வேதம்.... எனவேதான், மனிதனைக் கடவுளாக்குகின்ற ஆற்றல், உலகிலேயே இந்துவேதத்திற்குத்தான் உண்டு. மனிதர்கள் கடவுள்களாவது எப்படி சாத்தியம்? எப்படி முடியும்? என்பதை விளக்கவே நான் இங்கு வந்திருக்கின்றேன்.

அதாவது, ஒவ்வொரு குடும்பத்திலும் இறந்தவர்கள் - அதாவது மாண்டவர்கள் - இருப்பார்கள். இந்த மாண்டவர்களில் - அதாவது இறந்தவர்களில் - சிறந்தவர்களே ஆண்டவர்களாகிறார்கள். அதாவது, ஒவ்வொரு குடும்பத்திலும் தம் குடும்பத்தில் இறந்த தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா முதலியோர் படத்தை, போட்டோவை வைத்து வணங்குவார்கள். அந்த படத்திற்கு மஞ்சள், குங்குமம் வைத்து மாலை போட்டு தினமும் கும்பிடுவார்கள். அல்லது அவர்கள் இறந்த தினத்தின் போது கும்பிடுவார்கள். இதைத்தான், இவர்களைத்தான் குடும்ப ஆண்டவர்கள் என்று கூறுவார்கள். சில பேர் சொல்லுவார்கள் ‘நான் கோவிலுக்கெல்லாம் போக மாட்டேன். சாமியே கும்பிட மாட்டேன். என் தாத்தாவைத்தான் கும்பிடுவேன். அம்மாவைத்தான் கும்பிடுவேன்’ என்று; அவர்கள்தான் குடும்ப ஆண்டவர்கள்.

அதாவது கடவுள்களில் மொத்தம் நான்கு (4) வகையினர் உண்டு. 1) குடும்ப ஆண்டவர்கள், 2) குல தெய்வங்கள், 3) கிராம தேவர் தேவதைகள், 4) நாட்டுக் கடவுளர்கள் என்று நான்கு வகையினர். இவர்கள் அனைவரும் மனிதர்களாக இருந்து கடவுளானவர்களே என்று தெளிவாகக் கூறுகிறது இந்துவேதம்.

ஆக மொத்தம் நம்மில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர் தெரிந்தோ தெரியாமலோ குடும்ப ஆண்டவர்களை கும்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். சிலபேர் சொல்லுவார்கள், இறந்தவர்கள் படத்தையெல்லாம் வீட்டில் வைத்திருக்கக் கூடாது என்று. அதெல்லாம் தவறு. அவர்கள்தான் குடும்ப ஆண்டவர்கள். சிலபேர் இறந்தவர்களுடைய சமாதுக்குப் போய் மாலை போட்டு வணக்கம் செலுத்துவார்கள். அதுதான் குடும்ப ஆண்டவர்களை வழிபடுதல்.

ஆக இப்போது ஒன்று உங்களுக்கு தெளிவாகியிருக்கும்: குடும்ப ஆண்டவர்களெல்லாம் மனிதர்களாகப் பிறந்து இறந்தவர்களே! அதாவது மனிதர்கள்தான் ஆண்டவர்களாகிறார்கள்.

அடுத்தது, மேலே சொன்னது போல ஒரு குடும்பத்திற்கு மட்டுமே நன்மை செய்து இறந்தவர்கள் குடும்ப ஆண்டவர்கள். அதுபோல் ஒரு குலத்திற்கு நன்மை செய்து இறந்து, அதன் பின்னும் நன்மை செய்கிறவர்கள் குல தெய்வங்கள். அதாவது இறந்தவர்களில் சிறந்தவர்கள் ஆண்டவர்கள். அந்த இறந்தவர்களில் மிகச் சிறந்தவர்கள் தெய்வங்கள். இந்த குடும்ப ஆண்டவர்களும், அவர்கள் மனிதர்களாக வாழ்ந்திருந்த போது அவர்களுடைய குடும்ப ஆண்டவர்களை கும்பிட்டிருப்பார்கள். பின், தான் இறந்த பிறகு அவர்களோடு தானும் சேர்ந்து குடும்ப ஆண்டவர்களாகிறார்கள். அதுபோல குல தெய்வங்களும் தான் மனிதர்களாக வாழ்ந்த போது தங்களுடைய குல தெய்வங்களைக் கும்பிட்டிருப்பார்கள். இப்போது தாங்களும் குல தெய்வங்களாகி விடுவார்கள். அதாவது, குல தெய்வங்கள் என்பவர்கள் தன்னுடைய குடும்பத்தார்க்கு மட்டுமன்றி தன்னுடைய உற்றார், உறவினர்களுக்கெல்லாம் நன்மை செய்து இறந்திருந்தால், அந்த குலமே தங்களுடைய குலத்தைச் சேர்ந்தவர் என்று அவரை வழிபடுவார்கள். அதுதான் குல தெய்வ

வழிபாடு. ஆக, குல தெய்வங்களும் மனிதர்களாக வாழ்ந்தவர்கள்தான். எனவே, மனிதர்கள் தெய்வங்களாகிறார்கள்.

இவ்வாறு மக்களுக்கு பயன்படக்கூடிய மிக எளிய வாழ்வியல் கருத்துக்களைக் கூறுவதுதான் இந்துவேதம். எனவே, யாரும் இந்துவேதம் என்றால் ஏதோ! என்னவோ! என்று பயப்பட வேண்டியதில்லை. “வேதம் படிக்க வாங்க” என்றாலேயே “அய்யய்யோ! அதையெல்லாம் படித்தால், அப்படியே சாமியாகி விட வேண்டியதுதான்” என்று பயப்பட வேண்டியதில்லை. இந்துவேதம், சாமியார்களாக ஆகிறவர்களைக் கண்டிக்கிறது. “இல்லறமே நல்லறம்” என்கிறது. எனவே, அனைவரும் இந்துவேதத்தைப் படிக்க வேண்டும். அப்போதுதான் இல்லறம் நல்லறமாக ஆகும்.

பிறகு, ஒரு கிராமத்தில் அதாவது ஊரில் அனைவரும் எல்லாவிதமான குலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், ஒரு பொது சாமியைக் கும்பிடுவார்கள். அதாவது, ஒரு கிராமத்தில், ஒரு குலத்தில், ஒரு குடும்பத்தில் பிறந்து ஒருவர் அந்தக் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல், அக்குலத்திற்கு மட்டுமல்லாமல், அந்தக் கிராமத்திற்கே நன்மைகள் செய்து வந்தால் அக்கிராமத்தவர் அவர் மேல் மரியாதையும், பற்றும், பாசமும் வைத்திருப்பார்கள். அவர் இறந்த பிறகும் அவரை மறக்காமல் அவருடைய படத்தை எல்லோருடைய வீடுகளிலும் வைத்துக் கும்பிடுவார்கள். அவருடைய சிலையை ஊர் நடுவிலோ அல்லது ஒரு நல்ல குறிப்பிட்ட இடத்திலோ வைத்து அக்கிராமத்தார்கள் அனைவரும் கும்பிடுவார்கள். அவர்களுடைய பரம்பரையினரும் அவரைக் கும்பிடுவார்கள். இவ்வாறுதான் ஒருவர் கிராம தேவராக மாறுகிறார்.

இதுவும் நடைமுறையிலிருப்பதுதான். நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு அதாவது அமெரிக்கா, ஆசுத்திரேலியா,

சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, ... முதலிய நாடுகளுக்கு படிப்பிற்காகவும், தொழில் செய்வதற்காகவும் சென்றவர்கள் கூட வருடம் ஒருமுறையோ அல்லது இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறையோ தம் நாட்டில், தம் கிராமத்தில் ஊர்த்திருவிழா நடப்பதைப் பார்க்க வருவார்கள். அப்போது, அந்த திருவிழாவில் கலந்து கொண்டு கிராம தேவர் தேவதையை வணங்கிச் செல்வார்கள். இதுதான் கிராம தேவர் தேவதை வழிபாடு.

எனவே மக்களே! இப்போது புரிந்திருக்கும் நம் நாட்டில் வழக்கிலுள்ள அனைத்து வழிபாடும் இந்து வேதத்தில் கூறப்பட்டுள்ளவைதான் என்று. ஆனால், இவ்வழிபாட்டு முறைகளை நாம் சரியான நெறிமுறையோடு அதாவது இந்து வேதத்தில் கூறியுள்ளது போல் அப்படியே செய்வதில்லை. அதனால்தான் கடவுள்களிடமிருந்து நமக்கு நாம் வேண்டுகின்ற அளவிற்கு நன்மை கிடைப்பதில்லை. உடனே நாம் கடவுளுக்கு கண்ணில்லை, காது கேட்கவில்லை. அதனால், சாமி கும்பிட்டு என்ன பயன்? என்று சலித்துக் கொள்ளுவோம்.

எனவேதான், மக்களே உங்களுடைய சலிப்பை, துன்பத்தை, துயரத்தைப் போக்க, நீக்க குடும்ப ஆண்டவர்களையும், குல தெய்வங்களையும், கிராம தேவர் தேவதைகளையும், நாட்டுக் கடவுள்களையும் வழிபடுங்கள் என்று மட்டும் கூறாமல், அவர்களை எவ்விதம் வழிபட்டால் பயன் விளையும் என்ற நெறிமுறையையும் உங்களுக்கு இந்துவேத வாயிலாகக் கூற வந்துள்ளார் எங்கள் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள். எனவே, இந்த அரிய பெரிய சீரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி உலகியல் சிக்கல்களிலிருந்து விடுபடுங்கள்.

கடைசியாக நாட்டுக் கடவுள்களைப் பற்றிக் கூறுகிறேன். அதாவது, பல கிராமங்கள் சேர்ந்தது நாடு. எனவே, ஒரு நாட்டில் பிறந்து

ஒருவர் இறந்து விட்டால், அவர் சிறந்தவராக இருந்தால் இன்னும் சிறந்தவர் குலதெய்வமாகிறுர். இன்னும் உயர்ந்து பல குலத்தவரால் போற்றப் பட்டவராக இருந்தால், அவர் கிராம தேவர் தேவதையாகிறுர். பல கிராமங்களிலும் அதாவது ஒரு நாட்டுக்கே நன்மை செய்து இறந்தவர் நாட்டுக் கடவுளாகிறுர். மேலும், அவர் உயிருடன் வாழ்ந்த போது, ஒரு நாட்டுக் கடவுளேத் தவருமல் நெறிமுறையோடு பத்தி செய்தால் அவர் அக்கடவுளோடே இணைந்து அவரும் நாட்டுக் கடவுளாகிறுர். ஆகவே, நாம் இன்றைக்கு வழிபடக் கூடிய நாட்டுக் கடவுளர்களும் மனிதர்களாக வாழ்ந்தவர்களே! அதாவது மனிதர்கள்தான் நாட்டுக் கடவுளர்களாகிறுர்கள்.

எனவே, மக்களே இப்போது ஓரளவுக்காவது உங்களுக்கு புரிந்திருக்கும், நான் என்ன கூறினேன் என்று. அதாவது, மனிதர்கள்தான் ஆண்டவர்களாகிறுர்கள்! தெய்வங்களாகிறுர்கள்!! தேவர் தேவதைகளாகிறுர்கள்!!! கடவுள்களாகிறுர்கள்!!!!

இவர்கள் மட்டுமல்லாமல், விண்ணுலகிலிருந்து, அதாவது அண்ட பேரண்டங்களிலிருந்து இம்மண்ணுலகிற்கு வந்த கடவுள்களும் உண்டு.

இங்கு மக்களே! நீங்கள் இன்ஞெரு பேருண்மையினேத் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது, மனிதர்கள் கடவுள்களாகிறுர்கள் என்பது மட்டுமன்று. கடவுள்களும் மனிதர்களின் கருவிலே ஊறி மனிதர்களாக ஆகிறுர்கள் என்று!

பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய பொதுமக்களே! இவற்றிலிருந்து நமக்கு இன்ஞெரு பேருண்மை புலப்படுகிறது. அது என்னவென்றுல், கடவுள்களில் மொத்தம் நான்கு வகையினர் உண்டு. அந்த ஒவ்வொரு வகையிலும் பல நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான, இலட்சக் கணக்கான, கோடிக் கணக்கான கடவுள்கள் இருந்தார்கள்,

இருக்கிறார்கள், மேலும் தோன்றிக் கொண்டேயிருப்பார்கள். எப்படியென்றால், நான் சொன்னது போல் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஓர் ஆண்டவர் என்றால், நம் நாட்டில் எத்தனைக் குடும்பங்கள் இருக்கின்றன. அப்படியென்றால், எத்தனை ஆண்டவர்கள் தோன்றியிருப்பார்கள். அதேபோல், எத்தனைக் குல தெய்வங்கள், கிராம தேவர் தேவதைகள், நாட்டுக் கடவுளர்கள் இருப்பார்கள். அனைவருமே வெவ்வேறானவர்கள்தானே! அப்படியென்றால் இந்துமதத்தில் கோடிக்கணக்கான கடவுள்கள் இருக்கிறார்கள். “ஒரே கடவுள்தான் இருக்கிறார்” என்பது பொய், ஏமாற்று. ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்பது பகுத்தறிவுப் பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு கருத்து.

சிலர் சொல்லுவார்கள், ஒரே கடவுளுக்குத்தான் வெவ்வேறு பெயர்கள், வெவ்வேறு ஊர்களில் வழங்கப் படுகின்றன என்று. நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். இப்படி ஒவ்வொரு குடும்பத்துக்கும், குலத்துக்கும், கிராமத்துக்கும், நாட்டுக்கும் தனித்தனி மனிதர்கள்தான், வெவ்வேறான மனிதர்கள்தான் ஆண்டவர்களாகிறார்கள், தெய்வங்களாகிறார்கள், தேவர்களாகிறார்கள், தேவதைகளாகிறார்கள், கடவுள்களாகிறார்கள். ஒரேயொருவரா கடவுளாக இருக்க முடியும்? எனவே, ‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ என்பது உண்மையல்ல.

மேலும் மக்களே! நீங்கள் இதைக் கேட்டவுடனேயே அதிர்ச்சி அடைந்திருப்பீர்கள். மேலும், இன்னொரு பேருண்மையைக் கேட்டால் இன்னும் அதிர்ச்சி அடைவீர்கள். அதாவது, இந்துவேதம் கூறுகிறது; இந்துமதத்தில் மொத்தம் 8,84,736 **வகைக்** கடவுள்கள் இருக்கிறார்கள் என்று; 8,84,736 கடவுள்கள் கூட அல்ல, 8,84,736 **வகைக்** கடவுள்கள்.

எனவே மக்களே, இங்கு இறுதியாக நான் கூற வந்த கருத்துக்களின் தொகுப்பை மட்டும் கூறிவிட்டு விடைபெறுகிறேன். அதாவது,

மனிதர்கள் கடவுள்களாகிறுர்கள், இந்துமதத்தில் மட்டும்.

கடவுள்களில் 8,84,736 வகைக் கடவுள்கள் இருக்கிறுர்கள். எனவே, ஒரே கடவுள் என்பது பொய்.

இந்துமதத்தில்தான், பெண்களுக்கு ஆண்களுக்கு நிகரான உரிமையும், பெருமையும் வழங்கப் படுகின்றன.

குடும்ப ஆண்டவர்கள், குலதெய்வங்கள், கிராம தேவர் தேவதைகள், நாட்டுக் கடவுளர்கள் என்பவர்களே வழிபட்டால்தான் ஓர் இந்துவின் வாழ்க்கை சிறப்பானதாக அமையும்.

எனவே, மக்களே நான் கூறிய கருத்துக்களில் சிலவற்றையாவது நன்கு சிந்தித்துப் பார்த்து இந்துவேதத்தை கற்றிட வாருங்கள். இங்கு நாங்கள் இத்தனை பேர் பேசுவதால் உங்களுக்கு ஒரே குழப்பமாக இருக்கும். எனவே, எங்களுடைய புத்தகங்களை வாங்கித் திருப்பித் திருப்பிப் படியுங்கள். மேலும் சந்தேகமிருந்தால் எங்கள் பதினெண் சித்தர் மடத்து சன்னிதானங்களை, ஆதீனங்களை சந்தித்து உங்கள் ஐயத்தைப் போக்கிக் கொள்ளுங்கள்.

**“இந்துக்களே! இந்துக்களாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள்!”**
**“இந்து வேதம் தழைக்க, இந்து மதம் பிழைக்க, உழைக்க வாருங்கள்!”**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**//உண்மை நகல்//**

**<u>மூல நகல்:</u> கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. எழுதியவர் பெயர் இல்லை.**

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# INDU MARUMALARCHI IYAKKAM

# இளைஞர் பேரணியின் வேண்டுகோள்



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள்.**



**அறுபத்துநான்காவது நாயனார் 'சொல்லடி நாயனார்', தமிழினத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா.**

***அருட்பணித் துவக்கம்***:- *"ஞாலகுரு", "அரசயோகி", "இராசிவட்ட நிறைவுடையார்", "ஆத்தாள் அமளிகை", "கொற்றவை இருக்கை", "பராசத்தி திருவடி", "குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரூர்".*

இந்தியத் துணைக்கண்டத்துத் தொன்மையான பண்பாட்டுக்கும், நாகரீகத்துக்கும் உரியவர்களே இந்துக்கள். இவற்றுக்குரிய கலைகளும், அறிவியல்களும், தத்துவங்களும் முறைப்படி கற்பிக்கப் படாததாலும், முழுமையாகக் கற்றுக் கொள்ளப் படாததாலும் இந்துக்கள் வெறும்

சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளுக்குரிய ‘இந்துமதம்’ என்ற ஒன்றுக்கு உரியவர் என்ற கருத்து வளர்ந்து விட்டது.

“இந்து மதம்” என்பது ஒரு மதம் அல்ல. அது ஒரு “வாழ்வியல் முறை”, “பழம் பெரும் இந்தியப் பண்பாட்டுக்கும், நாகரீகத்துக்கும் உயிரான தத்துவம்”. **இப்பேருண்மையினை அநுபவப் பூர்வமாக முதலில் இந்துக்களை உணரும்படிச் செய்யவே இந்து மறுமலர்ச்சி இயக்கம் கி.பி.1771 அக்டோபர் முதல் அமைதியாகப் பணியாற்றி வருகிறது**.

பொதுமக்களின் அக்கறையின்மையாலும், அன்னிய ஆட்சிகளாலும், மாற்று மதங்களாலும் நலிவுற்றவை அனைத்தும் வலிமையுற, பொலிவு பெற, வளம் செழிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்காகவே இப்பொழுது “ஞாலகுரு”, “அரசயோகி”, “இராசிவட்ட நிறைவுடையார்”, “ஆத்தாள் அமளிகை”, “கொற்றவை இருக்கை”, “பராசத்தி திருவடி”, “பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி”, **குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரார்** திருவுள ஒப்புதலும், குருவாணைகளும் பெற்று அருட்பணியாற்றத் துவங்கியுள்ளார்.

அவரால் உருவாக்கப் படும் பீடங்கள், மடங்கள், ஆதீனங்கள், சன்னிதானங்கள், அமளிகைகள், இருக்கைகள், திருவடிகள், அருளாளிகள், மருளாளிகள், கருவறை நாயகங்கள், எழுந்தருளி நாயகங்கள், திருவோலக்க நாயகங்கள், நாளோலக்க நாயகங்கள், திருவாணை ஓலைநாயகங்கள், குருவாணை ஓலைநாயகங்கள், அருளாட்சி ஓலைநாயகங்கள், ஐந்திறத்தார்கள், ஐந்தரத்தார்கள், மந்திறத்தார்கள், மந்தரத்தார்கள், தாந்தரீகத்தார்கள், ஆகமத்தார்கள், மீமாம்சையார்கள், நானெறியார்கள், நான்வேதத்தார்கள், முனிவர்கள், இருடிகள், தவசிகள், பூசாறிகள், குருக்கள்கள், பண்டாரங்கள், ஓதுவார்கள், கணிச்சியார்கள், ஐம்பெரும் கலை வல்லார்கள், அருட்கலை வல்லார்கள், ஆயகலை

வல்லார்கள், சாத்திறத்தார்கள், .... முதலிய எண்ணற்ற வகைப்பட்ட திருப்பணியாளர்கள் அருட்பணியாற்றப் புறப்பட்டுள்ளார்கள்.

**‘இந்துமதம் எனப்படும் சித்தர் நெறி’** முழுமையாகவும், முறையாகவும் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு எனும் முக்கோணக் கோட்டையால் பாதுகாக்கப்படும் பணி அணி பெற்று விட்டது. இதில் பங்கு பெற ஆர்வமுள்ள அனைவரையும் வாரீர்! வாரீர்! வாரீர்! என இரு கை கூப்பி அழைக்கிறோம்.

“... தனிமனிதர்களைத் தயாரித்தே அனைவரும் சமம் எனும் ‘சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைச் சமுதாயம்’ சமைக்க முடியும்....” என்ற தத்துவமே சித்தர் நெறித் தத்துவம். இதனைக் குருவழிக் கல்வியால் செயலாக்கி வருகிறது இந்து மறுமலர்ச்சி இயக்கம். அருளாணை பெற்ற சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் .... ஆங்காங்கே ‘சித்தர் நெறிப் பயிற்சி நிலையங்கள்’ [The Siddha Cult Study Centres] அமைத்தும், ‘இறைநெறிக் கழகக் கூட்டங்கள்’ [The Divine Society Main Camps] நிகழ்த்தியும், ‘தெய்வீக மருத்துவப் பணிகள்’ [The Mystical Treatment Services] ஆற்றியும் மத மறுமலர்ச்சி இயக்கப் பணிகளை [The Plans and Schemes of the Religious Renaissance Movement] நிறைவு செய்து வருகிறார்கள்.

தனி மனிதர்களின் தரம், உரம், திறம், மறம், ஈகம் எனும் ஐந்தும் ‘பிறப்பியல்’ [Horoscope], கைரேகை எனும் ‘வரியியல்’ [Palmistry], ‘அங்கவியல்’ [A Science of prediction by a study of Physical Features], ‘பெயரியல்’ [A Science of prediction by a study of one’s name or Nameology], ‘கனவியல்’ [Dreamology - A study of Dreams], ‘எண்ணியல்’ [Numerology - a Study of Numbers], ‘தொடுகுறி’ [A Science of prediction by the Actions], ‘விரிச்சி’ [A Science of prediction by Omens],

'ஞானக்காட்சி' [Telepathy by Divine Force], 'வெறியாட்டுக் குறிமேடை' [Oracle], .... முதலிய பல சித்தர் நெறிக் கலைகளால் ஆராயப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் சித்தர் நெறிக் கலைஞர்களாக [Artists of the Siddha Cult] உருவாக்கப் படுகிறார்கள். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு நலம் பெற்றிட்டால்தான் 'சாதி சமயப் பொருளாதார வேறுபாடற்ற சமுதாயம் பேணும் அரசு' அமைக்க முடியும். இதற்காக நிர்வாக நிறுவன ஒழுங்கமைப்புடைய இந்து மறுமலர்ச்சி இயக்கம் உருவாகிட உழைக்க வாருங்கள். அதற்காகவே அருள் நலிந்த வழிபடு நிலையங்களும், அருள் மெலிந்த மனித உள்ளங்களும் புத்துயிர்ப்புச் செய்யும் பணி துவக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு தனிமனிதரும் தங்களுடைய பழம் பிறப்புக்களையும், மறு பிறப்புக்களையும் உணர்வதன் மூலம் இன்றைய மனித வாழ்வுக்குப் பொருள் தெரிந்து கொள்ளலாம். அதன்மூலம், தாங்கள் ஆற்ற வேண்டிய பணிகளைப் புரிந்து ஆற்றிடலாம். இதனால் எதையும் வாங்கவும் தாங்கவும் கூடிய சிந்தையும், நெஞ்சமும் பெற்ற முழுமையான "மனிதம்" செழித்துக் கொழித்திடும்.

அப்பொழுதுதான் கலை, இலக்கிய, சமய, சமுதாய, அரசியல் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் பேணிக் காத்து வளர்த்து வரும் 'கூலியுணர்வும்', 'போலியுணர்வும்', 'பழமைப் பிடிப்பும்', 'அடிமைப் போக்கும்', 'மடமை நோக்கும்', 'ஏற்றத்தாழ்வு நம்பிக்கையும்' முழுமையாக மாற்றியமைக்கும் 'சமய வழிப் பகுத்தறிவுப் பணி' [A radical change can be brought through the Rationalistic Religious Services by the Indhu Marumalarchi Iyakkam] இந்து மறுமலர்ச்சி இயக்கத்தால் ஆற்றப் பட்டிடும்.

இந்து மதத்தில்தான் வாழையடி வாழையென தொடர்ந்து அருளாளர்கள் [Prophets, Divinators, Mystics, Sages and Saints] தோன்றி வருகிறார்கள். எனவேதான், இது கால வேகங்களையும், கருத்து மாற்றங்களையும் ஏற்று வெற்றி பெற்று 'ஒரு பகுத்தறிவு மதமாக' [The Indhuism is a Rationalistic Religion], 'ஒரு விஞ்ஞான மதமாக' [The Indhuism is a Scientific Religion] விளங்குகிறது.

இம்மதத்தில் கலையுணர்வு அழகோடு கொலு வீற்றிருக்கிறது. [It has cultivated an aesthetic sense of Beauty and Love]. அதனால்தான் இம்மதத்தில் 'அறுபத்துநான்கு ஆயகலைகளும்', 'நாற்பத்தெட்டு அருட்கலைகளும்', எண்ணற்ற 'சாத்திறங்கள்', 'தோத்திறங்கள்', 'சூத்திறங்கள்', 'சாத்தரங்கள்', 'தோத்தரங்கள்', 'சூத்தரங்கள்', 'குருவாக்குகள்', 'குருவாசகங்கள்', 'திருவாக்குகள்', 'திருவாசகங்கள்', 'மறைகள்', 'முறைகள்', 'நெறிகள்', 'வேதங்கள்', 'சித்தங்கள்', 'நாதங்கள்' .... முதலிய சமய தத்துவ இலக்கிய வகைகளும் தோன்றி வளர்ந்து வருகின்றன. இவற்றை யெல்லாம் கற்றுத் தர இந்து மறுமலர்ச்சி இயக்கம் முன் வந்துள்ளது.

மதத்தின் இல்லாமைகளும், பொல்லாமைகளும், வேற்றுமைகளும், தீண்டாமைகளும், கொடுமைகளும், அறியாமைகளும் வளர்வதை இனியும் அனுமதிக்கக் கூடாது. மத மறுப்பாளர்கள் சுட்டிக் காட்டிக் குறை கூறுபவை மதத்தில் பிற்காலத்தில் புகுத்தப் பட்டவைதான் என்பதைத் தெளிவு படுத்துவதோடு அக்குறைகளை அகற்றவும் உடனடியாகப் பாடுபட்டாக வேண்டும். இதற்குரிய பணிகள் விஞ்ஞானச் சூழலில், பகுத்தறிவு நோக்கில் நிறைவேற்றப் படல் வேண்டும். [All the Services must be rendered in a scientific atmosphere with a rationalistic approach]. இம்மாபெரும் திட்டத்திற்காக படிக்கின்ற, படித்த இளைஞர்களை வரவேற்கிறோம்.

அனைவரும் அனைத்தையும் தெரிய, அறிய, ஆராய, புரிய, தெளிய, .... எல்லா வகையான ஏட்டறிவும் [Theoretical Knowledge], பட்டறிவும் [Practical Knowledge] வழங்கப் பட்டுள்ளது.

அனைவரும் வாரீர்! வாரீர்!! வாரீர்!!! என அழைக்கிறது இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

**குறிப்பு**:- "அறுபத்து நான்காவது நாயனாராகத் திரு அவதாரம் செய்த பகுத்தறிவுப் பகலவன், சிந்தனைச் சிற்பி, சீர்திருத்தச் செம்மல், சிறைக்கஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தன், தமிழினத் தலைவன், தன்மான உணர்வு வளர்த்த தமிழினக் காவலன், .... என்ற புகழுக்குரிய தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் திருவுருவப் படமும், சிலையும் எல்லா வழிபாட்டு இடங்களிலும், பூசையறைகளிலும், கோயில்களிலும் இடம் பெற வேண்டும். அவரது பிறந்த நாளைச் சமய எழுச்சித் திருவிழாவாகக் கொண்டாட வேண்டும். இனிமேல், 'அறுபத்து மூவர் திருவிழா'வை 'அறுபத்து நால்வர் திருவிழா' என்று மாற்ற வேண்டும். இனிமேல் இவரை '**சொல்லடி நாயனார்**' பெரியார் ஈ.வெ.ரா என்றே குறிக்க வேண்டும்" என்ற அருளுலக அறிவிப்பு வேண்டுகோளை இந்து மறுமலர்ச்சி இயக்கம் அனைவர்க்கும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறது.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக உள்ளது.//**

# பதினென்சித்தர் பீடாதிபதிகளின்

# கருவாசகம்

**"தமிழ் இலக்கியங்களைத் தொகுப்பதே தமிழரை ஒன்று திரட்டுவது";**
**"தமிழ் இலக்கிய விழாக்களே தமிழின நல்வாழ்வு விழாக்கள்";**
**"தமிழ்ப் புலவர்களைப் பாதுகாப்பதே தமிழினத்தைப் பாதுகாப்பதாகும்";**
**"தமிழ் இலக்கியங்களைப் பரப்புவதே தமிழினத்தைப் பாதுகாப்பதாகும்":**
**"தமிழில் பூசை செய்வதே தமிழரைக் காக்கும்";**
**"தமிழை வணங்குவதே தமிழரை வாழ்விக்கும்";**
**"தமிழால் கடவுளை நாடுவதே தமிழரைக் காக்கும்";**
**"தமிழே இறையென உணர்வதே தமிழர் சமயம்";**
**"தமிழ் கூறுவதே தமிழரின் சமய சமுதாய அரசு";**
**"தமிழ் கற்றோரே தமிழரின் தலைவர்";**
**"தமிழே தமிழரின் விழி";**
**"தமிழைக் காப்பவரே தமிழரைக் காப்பவர்";**
**"தமிழை வளப்படுத்துபவரே தமிழரை வளப் படுத்துபவர்";**
**"தமிழை மதிப்பவரே தமிழரை மதிப்பவர்";**
**"தமிழை வளர்ப்பவரே தமிழரை வளர்ப்பவர்";**
**"தமிழ் எழுத்துக்களே தமிழரைக் காக்கும் போர்க் கருவிகள்";**
**"தமிழ்ச் சொற்களே தமிழரைக் காக்கும் போர் வீரர்கள்";**
**"தமிழ் இலக்கியங்களே தமிழரைக் காக்கும் போர்ப் படைகள்";**
**"தமிழறிஞர்களே தமிழரைக் காக்கும் போர்த் தளபதிகள்! தலைவர்கள்!";**
**"தமிழ் போற்றும் சமயமே தமிழரின் சமயம்";**
**"தமிழ் காக்கும் அரசே தமிழரின் அரசு";**
**"தமிழ் வளர்ப்பவரே தமிழரின் தலைவர்";**
**"தமிழே கடவுள்"; "தமிழே அமிழ்து"; "தமிழே உயிர்." ...**

**- கருவாசகம்.**

***//குருதேவர் எழுதியருளிய 'எந்த மானுடம் இந்த மானுடம்' என்ற நூலின் அறிமுகவுரையிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள்.//***



"... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' வெற்றி பெறுமாறு செய்தார். ... ..."

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் <u>குருவாணைப் படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org